# முழு ஆண்டுத் தேர்வு

## மகிழ்ச்சி - ஆறாம் வகுப்பு

மதிப்பெண்கள் : 100 காலம் : 3 மணி

---

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **5 x 1 = 5**

1. நெல்சன் மண்டேலா ____________ எனப் போற்றப்படுகிறார்.
2. இலக்கிய வகைச் சொற்கள் _______________ வகைப்படும்.
3. விவேகானந்தர் பாறை உள்ள மாவட்டம் ______________.
4. அணி இலக்கணம் பற்றிக் கூறும் நூல் _______________.
5. தேசிய விளையாட்டு தினம் கொண்டாடப்படும் நாள் _______.

**II. பொருள் எழுதுக.** **5 x 1 = 5**

1. ஆக்கம் – _______________
2. கேடு – _______________
3. வெகுளி – _______________
4. மண் – _______________
5. புலால் – _______________

**III. பிரித்து எழுதுக.** **5 x 1 = 5**

1. விதிமுறை – _______________
2. அறவினை – _______________
3. மாசிலன் – _______________
4. விளையாடு – _______________
5. தெய்வமுண்டு – _______________

**IV. எதிர்ச்சொல் எழுதுக.** **5 x 1 = 5**

1. மறத்தல் x _________________

2. பெரியார் x ____________

3. வெற்றி x ____________

4. அருகில் x ____________

5. கேடு x ____________

**V. பொருத்துக.** **5 x 1 = 5**

| | |
|---|---|
| 1. மண்டேலாவின் பிறப்பு | டிசம்பர் 5 |
| 2. மண்டேலாவின் முதல் பெயர் | 1993 |
| 3. பாரத ரத்னா | ரோலிலாலா |
| 4. மண்டேலாவின் இறப்பு | ஜுலை 18 |
| 5. நோபல் பரிசு | 1990 |

**VI. சிறுவினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் பத்திற்கு மட்டும்)** **10 x 3 = 30**

1. எவற்றை மதிக்க வேண்டும்?
2. நெல்சன் மண்டேலா எங்கு, எப்போது பிறந்தார்?
3. இலக்கிய வகைச் சொற்களின் வகைகளை விளக்குக.
4. திரிசொல் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. வீரவர்மனுக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது?
6. எதைச் செய்தல் நன்மை தருமென வள்ளுவர் கூறுகிறார்?
7. இறுதிக்காலத்தில் துணையாக வருவது எது?
8. நாடாளும் அரசனின் பண்புகளை எழுதுக.
9. சுவாமி விவேகானந்தரின் சிகாகோ உரை பற்றி எழுதுக.
10. வஞ்சப்புகழ்ச்சி அணி என்றால் என்ன?
11. யாரை வையக் கூடாது?
12. "ஹாக்கி இரட்டையர்கள்" என அழைக்கப்பட்டவர்கள் யார்? ஏன்?
13. பதம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
14. பகுபத உறுப்புகள் யாவை?

**VII. பெருவினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் ஐந்திற்கு மட்டும்)** **5 x 7 = 35**

1. முடியரசன் அவர்களின் படைப்புகளைப் பட்டியலிடுக.
2. நெல்சன் மண்டேலாவிற்கு வழங்கப்பட்ட உயரிய விருதுகளின் பெயர்களை எழுதுக.
3. பின்வரும் குறட்பாக்களை அடிபிறழாமல் எழுதுக.

   அ. "மனத்துக்கண் மாசிலன்" எனத் தொடங்கும் குறள்.

   ஆ. "புகழும் இல" என முடியும் குறள்.
4. ஏலாதி – பெயர்க்காரணத்தை எழுதுக.
5. ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மற்றும் ஸ்ரீராமகிருஷ்ண மடம் குறிப்பு வரைக.
6. புகழ்வது போல இகழ்தலை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
7. தியான் சந்த்திற்கு அளிக்கப்பட்ட விருதுகள், சிறப்புகள் பற்றி எழுதுக.
8. பெயர்ப் பகுபதத்தின் வகைகளை விளக்குக.

**VIII. கடிதம் எழுதுதல். (ஏதேனும் ஒன்று மட்டும்)** **1 x 10 = 10**

1. உனது தெருவில் உடைந்துப் போன குடிநீர்க் குழாயை சரி செய்து தருமாறு ஊராட்சி மன்றத் தலைவருக்கு கடிதம் எழுதுக.
2. பேச்சுப்போட்டியில் பரிசு வென்ற உனது தோழிக்கு பாராட்டுக் கடிதம் எழுதுக.